# சுபீட்சம்

SUPEEDSAM – EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

நாள் தோறும் சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com

சனிக்கிழமை 28.01.2023 supeedsam.com supeedsam@gmail.com



உள்ளூராட்சி மன்றத் தேர்தல்– 2023

X

தலைவர் காட்டிய சின்னம்! தமிழர் மனங்களில் திண்ணம்!

தமிழ் அரசுக்கட்சி மட்டக்களப்பு மாவட்டம்


# நிறைவேற்றுவதாக உறுதியளிக்கப்பட்ட எந்தவொரு விடயமும் நிறைவேற்றப்படவில்லை

## நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்



நிறைவேற்றுவதாக உறுதியளிக்கப்பட்ட எந்தவொரு விடயமும் நிறைவேற்றப்படவில்லை என ஜனாதிபதி ரணில்

02 ஆம் பக்கத்தில்...

# மக்களின் வாழ்க்கையுடன் விளையாடும் எவராலும் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது



தொடர்ச்சியான மக்கள் சேவையை வழங்கும் பிரதேச சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களை உருவாக்குவதே ஐக்கிய மக்கள் சக்தியின் ஒரே நோக்கமாகும் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியால் நியமனமாகும் சகல உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும் தனித்துவமான சட்ட ஒழுங்குமுறைகள் உள்ளதாகவும், அவற்றை மீறும் எந்த

02 ஆம் பக்கத்தில்...


# மைத்திரிபாலவிற்கு கோட்டை நீதவான் எச்சரிக்கை



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை இன்று (2%) கோட்டை நீதவான் திலின கமகே எச்சரித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

# மின்சார சபைக்கு 108 பில்லியன் ரூபாய் வருமானம்



புதிய கட்டண முறை அமுல்படுத்தப்பட்ட முதல் மூன்று மாதங்களில் மின்சார சபைக்கு 108 பில்லியன் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பி

02 ஆம் பக்கத்தில்...

# யாழ். மாவட்டத்தில் 17உள்ளூராட்சி மன்றங்களுக்கு 4111 பேர் போட்டி!



யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தில் 1% உள்ளூராட்சி மன்றங்களுக்கு 402 உறுப்பினர்கள் தெரிவுக்காக 4111 பேர் போட்டியிடுகிறார்கள் என யாழ்ப்பாண மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் இ,அமல்ராஜ் தெரிவித்தார்.

யாழ்ப்பாண தேர்தல் அலுவலகத்தில் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தில் உள்ள 1% உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் இம்முறை போட்டியிடுகின்ற கட்சிகள் சுயேட்சை குழுக்கள் தங்களுடைய வேட்பு மனுக்களை தாக்கல் செய்திருக்கிற செயற்பாடு முடிவுறுத்தப்பட்டுள்ள நிலையில் இந்த முறை தேர்தலில் யாழ் மாவட்டத்தில் 13 அரசியல் கட்சிகளும் 15 சுயேட்சை குழுக்களும் போட்டியிடு

02 ஆம் பக்கத்தில்...




# வசந்த முதலிகேவுக்கு பிணை!



பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு - கோட்டை நீதிவான் நீதிமன்று இன்று இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

கடந்த செப்டெம்பர் மாதம் காலி முகத்திடல் பகுதியில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது, பொலிஸ் அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்த வழக்கில் இருந்தே வசந்த முதலிகே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதற்கமைய, அவரை 5 இலட்சம் ரூபா பெறுமதியான சரீர பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்துள்ளது.






# 75ஆவது சுதந்திர தினத்தை சிக்கனமான முறையில் பெருமையுடன் கோண்டாடுவோம்! ஜானதிபதி வேண்டுகோள்

"குறைந்த செலவில் பிரமாண்டமாகவும் பெருமையாகவும் சுதந்திர தினத்தைக் கொண்டாடுதல்'' தொடர்பான கலந்துரையாடல் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் வியாழக்கிழமை(26) ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

75ஆவது சுதந்திர தின விழாவை முன்னிட்டு, பெப்ரவரி 02 முதல் 19ஆம் திகதி வரை பல சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. அதில் சர்வ சமய வழிபாடுகள், சுதந்திர சதுக்கம் மற்றும் காலி முகத்திடலில் நடைபெறும் சுதந்திர தின பிரதான நிகழ்வுகள், தேசிய பூங்காக்கள் மற்றும் மிருகக்காட்சிசாலைக்கான இலவச அனுமதி, யாழ் கலாசார மையம் திறப்பு, கண்டி பெரஹர, தேவேந்திரமுனையிலிருந்து பருத்தித்துறை வரையான சைக்கிள் சவாரி போன்ற பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்நிகழ்வுகளுக்கான செலவினங்களை குறைப்பதற்கு முயற்சி செய்யுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, இதற்காக ஒதுக்கப்பட்ட பண ஒதுக்கீடு தொடர்பில் மக்கள் மத்தியில் பாரிய எதிர்ப்பு நிலவுவதை நினைவு கூர்ந்தார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

இந்த 75ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடுவதனால் சுற்றுலாப் பயணிகள்



மற்றும் முதலீட்டாளர்கள் மத்தியில் நாட்டைப் பற்றிய நல்லெண்ணத்தை உருவாக்கலாம். அத்துடன் சுதந்திர தினத்துடன் இணைந்த நகர்ப்புற காடுகளை உருவாக்கும் வேலைத் திட்டம், துபாய் நாட்டில் நடைபெறும் காலநிலை மாற்றம் தொடர்பான உச்சி மாநாட்டில் (இ௺க28) கலந்து கொள்ளல் மற்றும் பல்கலைக்கழகத்திற்கான திட்டமிடல் போன்றவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கிறோம். எனினும், திறைசேரியில் பணமின்மை காணப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், பிரதமர் தினேஷ் குணவர்தன, தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாக்க மற்றும் பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி, பாதுகாப்பு, வெளிவிவகாரம், கல்வி, புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள், வெகுசன ஊடகம், நிதி ஆகிய அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திறைசேரி உள்ளிட்ட துறைசார் நிறுவனங்களின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# களுதாவளையில் நடைபெற்ற பெங்கல் விழா..

(ரக்ஸனா)



மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்திற்குட்பட்ட களுதாவளைக் கிராமத்தில் வன்னிஹோப் அவுஸ்ரேலியா நிறுவனத்தின் அனுசரணையில் களுதாவளை இந்து மாமன்றம் ஏற்பாடு செய்திருந்த பொங்கல் விழா அண்மையில் களுதாவளை ஈஸ்வரன் ஆலய முன்றலில் நடைபெற்றது.

களுதாவளை இந்து மாமன்றத்தின் தலைவர் ப.குணசேகரன் தலைமையில் நடைபெற்ற இப்பொங்கல் விழாவில் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் கட்புல தொழில் நுட்பத்துறையின் தலைவர் கலாநிதி.சு.சிவரெத்தினம், வன்னி ஹோப் நிறுவனத்திக் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் சீ.றேகா, பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் சே.சுரேஸ், மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைத் தவிசாளர் சற்குணம், ஆலயங்களின் பரிபாலன சபையினர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது பாரம்பரிய முறையில் பொங்கல் நிகழ்வுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து பொங்கல் பண்டிகையின் மகத்துவம் தொடர்பில் இதன்போது மாணவர்களுக்கு கலந்து கொண்ட அதிதிகளால் உரைகளும், இடம்பெற்றன. பின்னர் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து அன்னதான நிகழ்வும் இடம்பெற்றது.

இந்நிலையில் தாம் முன்வைத்த கோரிக்கைக்கு இணங்க தம்மால் இதன்போது முன்நெடுக்கப்பட்ட பொங்கல் விழாவிற்கு நிதி அனுசரணை வழங்கிய வன்னிஹோப் நிறுவனத்திற்கு இதன்போது களுதாவளை இந்து மாமன்றத்தினர் நன்றியறிதலைத் தெரிவித்தனர்.

# இம்முறை பெரும் போக நெற் செய்கையாளர்கள் விழிப்புடன் செயற்படவேண்டும்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டம் விவசாயத்தினை ஜீவனோபாயமாக கொண்ட மாவட்டமாகும் நெல் வயல்களில் தற்போது பரவி வருகின்ற மஞ்சள் நிறமாதல் வளர்ச்சி குன்றல் இவ்வாறான நோய்தாக்கம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் சிபார்சு செய்யப்பட்ட கிரிமிநாசினியை பாவித்து கொள்ள வேண்டும்.

நாடளாவிய ரீதியில் நெற்செய்கையாளர்கள் இப்பிரச்சனைக்கு முகம் கொடுத்துள்ளனர் இன் நோய்தாக்கத்திற்கான காரணங்களாக நெமடோட தாக்கம் பனிப்பூச்சியின் தாக்கம் முறையற்ற பசளைப் பயன்பாடு கபில நிறப்புள்ளி நோய் என்பவற்றை குறிப்பிடுகின்றது விவசாய திணைக்களம்.

நெமடோட் தாக்கத்தை அடுத்து நெற்பயிர் தண்டு கபில நிறமாதல் மற்றும் வளர்ச்சி இன்மை பால் வேரின் நுனிப்பகுதி ஹொக்கி மட்டைபோன்று வேர் நுனிப்பகுதியில் முடிச்சுக்கள் காணப்படும்





நெமடோட் தக்கத்தினை கட்டுபடுத்துவதற்கான நடவடிக்கையாக வயல் வரவைகள் ஒவ்வேன்றிக்கும் தனித்தனியாக நீர் பாச்சப்படல்வேண்டும்.

ஒரு வயலுக்குள் பாவித்த உபகரணங்களை அடுத்த வயலுக்கு பாவிக்கும் போது சுத்தப்படுத்தி பாவிப்பது நல்லது தாக்கம் அதிகரிப்பின் நெமடோட் நாசினியான எபமெக்டினை பாவிக்கலாம் ஒரு ஹெக்டயருக்கு 50கிலோக்கிராம் இடல்வேண்டும் வயலில் ஒரு செ.மீ நீரை தேக்கிவைத்து இட்டு மூன்று தொடக்கம் ஐந்து நாட்கள் இருப்பது அவசியமாகும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும் போக விவசாயத்தில் 1%9500 ஏக்கர்கள் விவசாயம் செய்யப்பட்டுள்ளதாகவும் தற்போது ஏற்ப்பட்டுள்ள நோய்தாக்கத்திற்கு 62000 ஏக்கர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கு மேலதிகமாக கிழக்கு பல்கலைகழக விவசாய ஆராய்ச்சி பீடத்தினர் 10 வீதமான பாதிப்புத்தான் மட்டக்களப்பில் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர். எது எவ்வாறாயினும் விவசாயிகள் அவதானமாக செயற்படவேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வன்னி ஹோப் அவுஸ்ரேலியா நிறுவனத்தினால் சத்து உணவு வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பித்து வைப்பு











வன்னி ஹோப் அவுஸ்ரேலியா நிறுவனத்தினால் சத்து உணவு வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பித்து வைப்பு.

வன்னி ஹோப் அவுஸ்ரேலியா நிறுவனத்தின் அனுசரணையில் பாலர் பாடசாலை மாணவர்களுக்கு சத்து உணவு வழங்கும் வேலைத்திட்டம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வன்னிஹோப் நிறுவனத்தின் அனுசரணையில் இலங்கையில் நாடுபூராகவும் முன்னெடுத்து வரும் சத்து உணவு வழங்கும்விசேடவேலைத்திட்டத்தின்கீழ் திருகோணமலை மாவட்டம் கிண்ணியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட பைசல் நகர் கிராமத்தில் பாரதி நகர் பாலர் பாடசாலை மற்றும் கடலூர் பாலர் பாடசாலைகளில் கல்வி கற்கின்ற வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மாணவர்களின் போசாக்கை அதிகரிக்கும் நோக்கில் காலை உணவுக்கான சத்து உணவு வழங்கும் வேலைத்திட்டம் இதன்போது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

ரோட்ரிகோ நிதியத்தின் நிதி அனுசரணையில் வன்னி ஹோப் அவுஸ்திரேலியா நிறுவனத்தின் ஊடாக இவ் வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நிறைவேற்றுவதாக உறுதியளிக்கப்பட்ட...

விக்ரமசிங்க தலைமையில் (26.01.2023) நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டத்தில் தான் தெரிவித்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகவியலாளர்களிடம் இன்று (2%.01.2023) இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், இதற்கு முன்பு நடைபெற்ற 4 கூட்டங்களிலும் சொன்னதையே ஜனாதிபதி இன்றும் கூறுகின்றார். எவையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

சுதந்திர தினத்துக்கு முன்பு எல்லாம் நிறைவேற்றப்படும் என வாக்குறுதியளிக்கப்பட்டது. எதுவும் இடம்பெறவில்லை என்பது தான் திடமான உண்மை என்பதை இங்கே பதிவு செய்கின்றேன் என தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன், அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்திலிருந்து கொழும்பு அரசாங்கத்தால் திரும்பப் பெறப்பட்ட அதிகாரங்களை மீண்டும் மாகாணத்திடம் கையளிக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பது குறித்து ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து ஜனாதிபதியிடம் அறிக்கை ஒன்றையும் சி.வி.விக்னேஸ்வரன் ஜனாதிபதியிடம் கையளித்துள்ளதாக தெரியவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## யாழ். மாவட்டத்தில் 17உள்ளூராட்சி...

கின்றன.

13 அரசியல் கட்சிகள் சார்பில் 135 வேட்புமனுக்களும் 15சுயேட்சை குழுக்கள் சார்பில் 15 வேட்புமனுக்களுமாக 150 வேட்பு மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டு தேர்தலுக்குரிய வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த முறை தேர்தலில் வாக்களிப்பதற்கென யாழ் மாவட்டத்தில் 4 லட்சத்து 86 ஆயிரத்து 423 வாக்காளர்கள்வாக்களிக்க தகுதி பெற்றுள்ளார்கள் அவர்கள் வாக்களிப்பதற்காக 514 வாக்களிப்பு நிலையங்கள் யாழ் மாவட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்முறை உள்ளூராட்சி மன்றசட்டத்திற்கிணங்க அந்தந்த வட்டாரங்களிலே வாக்குகள் எண்ணப்பட்டு வட்டாரங்களுக்கான முடிவுகள் அறிவிக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளோம் அந்த வகையிலே 243 வாக்கு எணணும் நிலையங்கள் யாழ் மாவட்டம் முழுவதுமாக அமைக்கப்படவுள்ளன.

எனவே அந்த 243 வாக்களிப்பு நிலையங்களில் வாக்குகள் எண்ணப் பட்டு வட்டார தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு பின்னர் மாவட்ட ரீதியாக முடிவுகள் அறிவிக்கப்படுகிற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள.

மொத்தமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளுக்குமாக வட்டார அடிப்படையில் 243 உறுப்பினர்களும் கட்சிகள் பெற்றுக் கொள்கின்ற வாக்குகளின் அடிப்படையில் தெரிந்து அனுப்பப்பட வேண்டிய 159 வேட்பாளர்களுமாக 402 உறுப்பினர்கள் 17 சபைகளுக்கும் தெரிவு செய்யப்பட வேண்டிஇருக்கின்றது.

இந்த 402 உறுப்பினர்கள் தெரிவிற்காக யாழ்ப்பாண மாவட்டத்தில் 4111வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள் 13 கட்சிகள் சார்பில் 3686 வேட்பாளர்களும் 15 சுயேட்சை குழுக்கள் சார்பாக 425 வேட்பாளர்களுமாக 4111 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளார்கள் இதன் அடிப்படையில் மொத்த வாக்காளர் தொகையிலேயே 0.85 வீதமான வேட்பாளர்கள் அவர்கள் தேர்தலில் போட்டியிட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மக்களின் வாழ்க்கையுடன் விளையாடும்...

உறுப்பினருக்கும் தண்டனை பிறப்பிக்கப்படும் எனவும், அவர்களுக்கு எதிராக தவறாது ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வெளியேற்றப்படுவார்கள் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். தீர்வற்ற நாட்டுக்குத் தீர்வு எனும் கருப்பொருளில் ஐக்கிய மக்கள் சக்தியால் தெஹியத்தகண்டியில் இன்று(27) நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தமது உறுப்பினர்களுக்கு ஒப்பந்தங்கள் தடை செய்யப்பட்டுள்ளதாகவும், பொதுமக்களின் சொத்துக்களுடன் விளையாடுவதற்கு அவர்களுக்கு அனுமதியில்லை எனவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், ஐக்கிய மக்கள் சக்தியால் விழுமியம் சார் உள்ளூராட்சி மன்றங்களை கட்டியெழுப்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

வரலாற்றில் எக்காலத்திலும் ராஜபக்சர்களை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்காக ஐக்கிய மக்கள் சக்தியோ அல்லது தானோ வீடு வீடாக சென்று பிரச்சாரம் செய்யவில்லை எனவும், பிரசார கூட்டங்களை நடத்தவில்லை எனவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், நாட்டை அழித்து மக்களின் வாழ்க்கையுடன் விளையாடும் எவராலும் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது எனவும் தெரிவித்தார்.

அரசியல்வாதிகள் உள்ளிட்ட நபர்களால் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை மீட்பதற்கான சட்ட மூலமொன்று பாராளுமன்றத்திற்கு கொண்டு வருவதாகவும், சர்வ கட்சிகள் அடங்கிய ஆணைக்குழுவொன்று ஸ்தாபிக்கப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## மைத்திரிபாலவிற்கு கோட்டை...

திறந்த நீதிமன்றில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்ட மைத்திரிபால சிறிசேன நீதிமன்றில் ஆஜராகாததால் இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக்குதல்கள் நடத்தப்படும் என்ற புலனாய்வு தகவல்கள் கிடைத்திருந்த போதிலும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் என்ற ரீதியிலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற ரீதியிலும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த தாக்குதல்களை தடுக்க தவறியதை சவாலுக்கு உட்படுத்தி கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தனிப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பின்னர் மார்ச் 1% ஆம் திகதி மீண்டும் விசாரணை நடத்த நீதவான் உத்தரவிட்டார்.

கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தின் மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் ஒரு காலை இழந்தவர் மற்றும் வணக்கத்திற்குரிய சிறில் காமினி ஆகியோரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

## மின்சார சபைக்கு 108 பில்லியன்...

னர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

நிதி நெருக்கடி மற்றும் நஷ்டம் காரணமாக தொடர்ந்து மின்சார விநியோகத்தை வழங்க முடியாது என்ற கூற்றினை ஏற்றுக்கொள்ள முடியாதது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அரசின் அசாதாரண வரிச் சுமையை கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்





**பாறுக் ஷிஹான்**

அரசாங்க உத்தியோகத்தர்களின் சம்பளத்திற்கான வரி விதிப்பு சம்மந்தமாக தொழில் வல்லுனர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு வியாழக்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றினை கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு முன்பாக நடாத்தியது.

'அநீதியான அரசின் தன்னிச்சையான மக்களுக்கு பாதகமான வரிக்கொள்கையை கண்டிப்போம்' எனும் தொனிப்பொருளில் பல்வேறுபட்ட தொழிற்சங்கங்கள் இணைந்து இக் கண்ட ஆரப்பட்டத்தினை மேற்கொண்டனர்.

அதிகரித்த வரிகளை வசூலிப்பதன் மூலம் பொதுத்துறையில் பணியாற்றும் தொழில்வாண்மைமிக்கோருக்கான ஊதியத்தினை குறைப்பதற்கு அரசாங்கம் முயற்சிப்பதுடன் மட்டும் நின்றுவிடாமல் , அவ்வாறு வரிகள் விதிக்கப்படுவது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காகத்தான் என்ற போலியான பிரச்சாரத்தினையும் முன்னெடுத்து வருகின்றது .

ஆனால் எமது வரிகள் மூலம் திரட்டப்படும் பணம் நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் நோக்கத்திற்காக ஒருபோதும் பயன்படுத்தப்படபோவதில்லை . இந்த வரி அதிகரிப்பு நியாயமற்றது என்பது மட்டுமல்ல . இதனால் எமது தேசம் அதன் சாத்தியமான முழு வளத்தினையும் இழக்கும் அபாயம் உள்ளது .என்ன விலையினைக் கொடுத்தாவது இம்மோசமான பேரிடர் நிலையினை முற்றுமுழுதாக தடுக்கவேண்டும் .

எமது நாட்டில் இன்று நிலவுகின்ற பொறுப்பற்ற , அநீதியான நிலை குடிமக்களை ஆதரவற்ற நிலைக்குத் தள்ளியுள்ளதனையும் இங்கு நாம் கவனத்திற்கொள்ள வேண்டியுள்ளது என்ற விடயத்தை மையப்படுத்தி ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பட்டத்தினை மேற்கொண்டனர்.

திணிக்காதே திணிக்காதே வரியினை திணிக்காதே!,வெளியேற்றாதே வெளியேற்றாதே மூளைசாலிகளை வெளியேற்றாதே!,அடிக்காதே அடிக்காதே மக்களின் வயிற்றில் அடிக்காதே! எனும் பல சுலோகங்களை முன்வைத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கண்டனத்தை மேற்கொண்டனர்.

இக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம், இலங்கை மின்சார சபை ஊழியர்கள், சங்கம் வைத்தியர்களின் சங்கம் ஆகிய தொழிற் சங்கங்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் அறிமுக கூட்டங்கள்!

**உள்ளூராட்சி மன்ற தேர்தல் 2023**

1)தமிழரசுக்கட்சியின்கல்குடாதொகுதிக்கான வேட்பாளர் அறிமுகக்கூட்டம்

**காலம் :- 28.01.2023 (சனிக்கிழமை)**
**நேரம் :- பி.ப 03.00 மணி**
**இடம் :- முருகன் கோவில் வீதி**
**வெளியரங்கு**
**சித்தாண்டி 2**

2) பட்டிருப்பு தொகுதிக்கான வேட்பாளர் அறிமுகக்கூட்டம்

**காலம்:29/01/2023,**
**(ஞாயிற்றுக்கிழமை)**
**நேரம்:மு.ப. 09, மணி**
**இடம்:பிரிதி திருமண மண்டபம், பிரதானவீதி, பெரியகல்லாறு.**

3) மட்டக்களப்பு தொகுதிக்கான வேட்பாளர் அறிமுகக்கூட்டம்

**காலம் 29/01/2023, ஞாயிறு**
**நேரம்:பி.ப.02, மணி**
**இடம்: அமரிக்கன் மெசன் மண்டபம், திருமலை வீதி (சின்ன ஊறணி)**
**மட்டக்களப்பு.**

குறிப்பு: அனைத்து வட்டார வட்பாளர்களும்,பட்டியல் வேட்பாளர்களும் ஆண்கள் வெள்ளை வேட்டி அணிந்தும், பெண்வேட்பாளர்கள் சேலை அணிந்தும் வருதல் எமது பாராம்பரியத்தை பேணுவதாக அமையும் !

விரும்பியவர்கள் மஞ்சள், சிவப்பு, பச்சை நிறம் கலந்த சால்வை அணிந்து வருவது மேலும் சிறப்பாக அமையும்.

அறிமுகத்தின்போது நேரத்தை கருத்தில் கொண்டு தமது பெயர் தமது பிரதேச சபை, தமது வட்டாரத்தின் பெயர் என்பவற்றை மட்டும் கூறலாம், வேட்பாளர்கள் உரை இடம்பெறாது .

# உலகவங்கி அனுசரணையில் செத்தல் மிளகாய் பயிரிடும் விவசாயிகளுக்கு பாரிய உதவி





**( வி.ரி. சகாதேவராஜா)**

உலக வங்கி நிதி அனுசரணையில் திருக்கோவில் மற்றும் பொத்துவில் பிரதேசத்தில் செத்தல் மிளகாய் பயிரிடும் விவசாயிகளுக்கு பலகோடி ரூபாய் பெறுமதியான பாரிய உதவித்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

விவசாய அமைச்சினால் கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் ஊடாக உலகவங்கியின் நிதி பங்களிப்புடன், நவீன விவசாய மயமாக்கலின் கீழ் திருக்கோவில் மற்றும் பொத்துவில் பிரதேச செயலகங்களுக்குட்பட்ட 300 பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு விவசாயிக்கும் 16 லட்சம் ரூபாய் பெறுமதியான விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன், பொத்துவில் பிரதேச செயலாளர் எம் ஐ .பிர்னாஷ், விவசாய திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திசாநாயக்க, உதவிப் பணிப்பாளர் எஸ் பரமேஸ்வரன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டு அவற்றை வழங்கி வைத்தார்கள்.

இத்திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 100 விவசாயிகளுக்கு செந்தில் மிளகாய் பயிர்ச் செய்கைக்கான உழவு இயந்திர பாகங்கள், உபகரணங்கள்,உள்ளீடுகள் வரை வழங்கப்பட்டது.

மொத்தமாக திட்டத்தின் கீழ் 300 விவசாயிகளுக்கு இவை வழங்கப்படஉள்ளன .அதில் 150 விவசாயிகள் கோமாரி பிரதேசத்தில் இருந்தும், மீதி 150 விவசாயிகள் தங்கவேலாயுதபுரம் கிராமத்தில் இருந்தும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

# மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்கு பல கோடி ரூபாய் செலவில் உடன்படிக்கை!

**(வி.ரி.சகாதேவராஜா)**

மட்டக்களப்பு மாவட்ட கல்வி சுகாதார சமூகநல திட்டங்களுக்கான பல கோடி ரூபாய் பெறுமதியான ஓர் உடன்படிக்கை மலேசிய மட்டக்களப்பு றோட்டரி கழகங்களுக்கு இடையே கைச்சாத்தானது.

பல கோடி ரூபாய் பெறுமதியான இந்த ஒப்பந்தம் நேற்று மாலை கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இடம்பெற்றது .

இந்த உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வில் மட்டக்களப்பு ரோட்டரிக் கழகத் தலைவர் ரோட்டரியன் பு. ரமணன்

மலேசிய கோலாலம்பூர் மத்தி ரோட்டரிக் கழக தலைவி றோட்டரியன் அஞ்சலினா ஆரோக்கியசாமி ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

மேலும்,மலேசிய மாவட்ட ரோட்டரி ஆளுநர் ராஜசேகரன் பிண்டி மற்றும்



கனகேஸ்வரி சுப்பையா ஆகியோரும் கலந்து சிறப்பித்தார்கள்.

இந்த பல கோடி ரூபாய் பெறுமதியான இந்த வேலைத் திட்டங்கள் எதிர்வரும் மாதங்களில் ஆரம்பமாக இருக்கின்றது .இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் பலனடைய இருக்கின்றார்கள் என்று ரோட்டரி கழகத் தலைவர் பு.ரமணன் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

# வெள்ளவத்தை சைவமங்கையர் கலை விழா






**(அஷ்ரப் ஏ சமத்)**

கொழும்பு 6 வெள்ளவத்தை சைவ மங்கையர் பாடசாலையின் ஆரம்பப் பிரிவு மாணவிகளது கதம்ப விழா கலை நிகழ்ச்சிகள் 21.01.2023 வெள்ளவத்தை இராமக்கிருஸ்னன் மண்டபத்தில் கல்லூரி பாடசாலை அதிபர் திருமதி அருந்ததி இராஜவிஜயன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பரத சூடாமணி திருமதி வாசுகி முகுந்தன் கலந்து சிறப்பித்தார். .இந் நிகழ்வில் மாணவர்களின் திறன்கள் மற்றும் படைப் பாாற்றல்களை வெளிப்படுத்தும் பல்துறை சார்ந்த நிகழ்ச்சிகள் மேடையேற்றப்பட்டனர். ஆசிரியைகள், பெற்றார்கள் மாணவிகள் பெருமளவில் கலந்து சிறப்பதித்தனர்.

# 5ஆம் ஆண்டு புலமைபரிசு பரீட்சையில் வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் முதலிடம்

**(வாஸ் கூஞ்ஞ)**

தற்பொழுது வெளிவந்திருக்கும் 2022 ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் ஆண்டு புலமை பரிசு பரீட்சையில் நாட்டில் நூறு கல்வி வலையங்களில் 329668 பரீட்சாத்திரிகளில் 2%3515 மாணவர்கள் பகுதி ஒன்று இரண்டிலும் தலா 35 புள்ளிகளுக்கு மேல் பெற்ற அடிப்படையில் மொத்தமாக %0 புள்ளிகளுக்கு மேல் பெற்று பரீட்சையில் சித்தி அடைந்துள்ளனர்.

அதாவது 82.9% வீதமான மாணவர்கள் %0 புள்ளிகளுக்கு மேல் பெற்று இவ் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் பரீட்சை முடிவின் வடக்கு மாகாணத்தின் 13 கல்வி வலயங்களை நோக்கும்போது யாழ்ப்பாணம் கல்வி வலயம் முதலாம் இடத்தையும் துணுக்காய் கல்வி வலயம் பதின்மூன்றாம் இடத்தையும் எட்டியுள்ளன.

அதாவது யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் 2747 மாணவர்கள் பரீட்சையில் தோற்றியதில் 2281 மாணவர்களில் 83.04 வீதமானோர் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று 1ம் இடத்தையும், தென்மராட்சி கல்வி வலயத்தில் 901 மாணவர்கள் தோற்றி 736 மாணவர்களில் 81.69 வீதமானோர் சித்தியடைந்து 2ம் இடத்தையும், வடமாராட்சி கல்வி வலயத்தில் 1420 மாணவர்கள் தோற்றி 1151 மாணவர்களில் 81.06 வீதமானோர் சித்தியடைந்து 3ம் இடத்தையும் , வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் 2296 மாணவர்கள் பரீட்சையில் தோற்றி 1833 மாணவர்களில் 79.83 வீதமானோர் சித்தியடைந்து 4ம் இடத்தையும் , மடு கல்வி வலயத்தில் 454 மாணவர்கள் தோற்றி 360 மாணவர்களில் 79.3 வீதமானோர் சித்தியடைந்து 5ம் இடத்தையும் , முல்லைத்தீவு கல்வி வலயத்தில் 1528 மாணவர்கள் பரீட்சையில் தோற்றி 1205 மாணவர்களில் 78.86 வீதமானோர் சித்தியடைந்து 6ம் இடத்தையும் ,

கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தில் 543 மாணவர்களில் 428 மாணவர்களில் %8.82 வீதமானோர் சித்தியடைந்து %ம் இடத்தையும் , தீவுப்பகுதி கல்வி வலயத்தில் 536 மாணவர்கள் தோற்றி 422 மாணவர்களில் 78.73 வீதமானோர் சித்தியடைந்து 8ம் இடத்தையும் , வலிகாமம் கல்வி வலயத்தில் 2618 மாணவர்களில் 2045 மாணவர்கள் 78.11 வீதமானோர் சித்தியடைந்து 9ம் இடத்தையும் , வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் 610 மாணவர்களில் 474 மாணவர்கள் 77.7 வீதமானோர் சித்தியடைந்து 10ம் இடத்தையும் ,கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தில் 1642 மாணவர்கள் தோற்றி 1213 மாணவர்களில் 73.87 வீதமானோர் சித்தியடைந்து 11ம் இடத்தையும் , மன்னார் கல்வி வலயத்தில் 1705 மாணவர்கள் தோற்றி 1257 மாணவர்களில் 73.72 வீதமானோர் சித்தியடைந்து 12ம் இடத்தையும் , துணுக்காய் கல்வி வலயத்தில் 627 மாணவர்களில் 441 மாணவர்கள் 70.33 வீதமானோர் சித்தியடைந்து 13ம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

# பிரதேச செயலாளர்கள் மற்றும் மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான கூட்டம்




**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர்கள் மற்றும் மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. கலாமதி பத்மராஜா தலைமையில் மாவட்ட செயலகத்தில் இன்று (27) இடம்பெற்றது.

பிரதேச செயலாளர்களினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டது.

அலுவலகங்களில் காகிதாதிகளின் பாவனையைக் குறைப்பதற்காக, இயன்றளவு, நவீன தொழில்நுட்ப மயமாக்கலின் ஊடாக அலுவலகக் கடமைகளை மேற்கொள்ளுமாறு அரசாங்க அதிபரினால் பணிப்புரை வழங்கப்பட்டது.

இதன்போது பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அரசாங்க நிருவாக நடவடிக்கைகளை கணக்கெடுக்கும் முறைமையை (SYSCGAA) நடைமுறைப்படுத்தல், சுதந்திர தின நிகழ்வு, நலன்புரி சேவைகள், புதிய நாடு புதிய கிராமம் நிகழ்ச்சித் திட்டம் ஆகிய நிருவாக விடயங்களும்,

சௌபாக்கியா கிராமம் வேலைத்திட்டத்திற்கான முன்மொழிவு, நீர்ப்பாசன அமைச்சினால் காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான நிகழ்ச்சித் திட்டம், உணவுப் பாதுகாப்பும் போஷாக்கு தொடர்பான வேலைத்திட்டம், காணி, சமுர்த்தி மற்றும் உள்ளகக் கணக்காய்வு என்பன தொடர்பாக ஆராயப்பட்டன.

முன்பள்ளி மாணவர்களுக்கான காலை உணவு வழங்கல், கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போஷாக்குப் பொதி விநியோகம், மற்றும் உள்ளூராட்சித் தேர்தல் கடமைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர்களான திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த், திருமதி நவரூப ரஞ்சனி முகுந்தன் (காணி), மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்த்தி, பிரதான கணக்காளர் திருமதி இந்திராமதி மோகன், மற்றும் உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# பாரம்பரிய கலாசார அம்சங்களுடன் இடம்பெற்ற மட்டக்களப்பு மாவட்ட தைப்பொங்கல் விழா!




















(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்ட செயலகமும் மாவட்ட சமய சமூக கலாசார ஒன்றியமும் இணைந்து நடாத்திய தைப்பொங்கல் விழா வியாழக்கிழமை வெகுவிமர்சையாக இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.கலாமதி பத்மராஜா தலைமையில் மாவட்ட செயலக முன்றலில நடைபெற்ற நிகழ்விற்கு ஆன்மீக அதிதியாக கிழக்கு இலங்கை இந்து குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ லோகநாதன் குருக்கள் கலந்துகொண்டு ஆசி வழங்கியதுடன் நிகழ்வினை சிறப்பித்திருந்தார்.

அதிதிகளுக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு வரவேற்பளிக்கப்பட்டு, மாவட்ட அரசாங்க அதிபரினால் நந்திக் கொடி ஏற்றப்பட்டதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பிக்கப் பட்ட நிகழ்வில் பாரம்பரிய முறைப்படி அரிசி குற்றி பொங்கல் பொங்கியதுடன், பாரம்பரியமான வாழ்கை முறையினை பிரதிபலிக்கின்ற பழமைவாய்ந்த பண்பாட்டு கலைப்பொருட்கள் இதன் போது மக்கள் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.


இப்பொங்கல் விழாவின் போது பிரதான பொங்கல் பானைக்கான அரிசியினை மாவட்ட அரசாங்க அதிபர் இட்டதுடன், பொங்கல் பொங்கி மாவட்ட செயலக ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ உத்தம ஜெயதீஸ்வர குருக்களினால் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இத்தைப்பொங்கல் விழாவினை சிறப்பிக்கும் முகமாக விசேட சொற்பொழிவு இடம்பெற்று, பல்வேறு கலை கலாசார நிகழ்வுகள் சிறார்களினால் அரங்கேற்றப்பட்டதுடன் அவர்களுக்கான பரிசில்கள் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டது.

மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த், காணிப்பிரிவிற்கான மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.நவரூபரஞ்ஜினி முகுந்தன், மாவட்ட செயலக பிரதம கணக்காளர் திருமதி.இந்திராவதி மேகன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.சசிகலா புண்ணியமூர்த்தி, மாவட்ட செயலக பிரதம உள்ளக கணக்காய்வாளர் ஆர்.காயத்திரி, மாவட்ட செயலக கணக்காளர் எம்.வினோத், பிரதேச செயலாளர்களான மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன், மண்முனைபற்று பிரதேச செயலாளர் திருமதி.ந.சத்தியானந்தி, மாவட்ட செயலக நிருவாக உத்தியோகத்தர் கணபதிப்பிள்ளை மதிவண்ணன், மாவட்ட செயலக பொறியியலாளர் ரீ.சுமன், மாவட்ட செயலக பிரதித்திட்டமிடல் பணிப்பாளர்களான ஆர்.ஜதீஸ்குமார், ஆ.சுதாகரன், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வீ.ஈஸ்வரன், மாவட்ட ஊடக பொறுப்பதிகாரி வ.ஜீவானந்தன், மட்டக்களப்பு மாவட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலரும், மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தெரிவத்தாட்சி அலுவலருமான எம்.வீ.எம்.சுபியான், கமக்கார அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் அருளானந்தராஜா ரமேஸ், ஆனந்தகிரி அறப்பணி மன்றத்தின் தலைவர் எல்.தீபாகரன், உதவும் கரங்கள் அமைப்பின் தலைவர் ச.ஜெயராஜா, ஓய்வு நிலை அதிபர் திருமதி.இந்திராணி புஸ்பராஜா, உள்ளிட்ட மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பெருமளவானார் கலந்துகொண்டு நிகழ்வினை சிறப்பித்திருந்ததுடன், நிகழ்வினை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கி.குணநாயகம் தொகுத்து வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவை விட இலங்கையில் தான் கலை ஆர்வம் அதிகம்!

## நடனக் கலைஞர் சிதம்பரம் சுரேஷ் கருத்து







**வி.ரி.சகாதேவராஜா**

**காரைதீவு நிருபர்**

இந்தியாவில் கலை பிறந்து இருக்கலாம். ஆனால் இலங்கையில் தான் கலை ஆர்வம் மிகவும் கூடுதலாக இருக்கிறது .

இவ்வாறு ஆஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த பிரபல நடன கலைஞர்சிதம்பரம்ஆர்சுரேஷ் தெரிவித்தார்.

அவருடன் அவரின் மனைவி நடன நர்த்தகி ஷோபனா சுரேஷ் அவர்களும் நேற்று முன்தினம் (24) செவ்வாய்க்கிழமை மாலை வருகை தந்திருந்தார் .

காரைதீவு விபுலானந்தா மணிமண்டபத்தில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நடனத்துறை காரைதீவு மாணவி ஜெயகோபன் தக்சாளினியின் அழைப்பை ஏற்று இக் கலைக்குடும்பத்தினர் வருகை தந்தனர்.

அங்கு அவர்கள் சுவாமி விபுலானந்தர் பிறந்த இல்லத்தையும் அரும்பொருள் காட்சியகத்தையும் பார்வையிட்டனர்.

பின்னர் மணிமண்டபத்தில் விபுலானந்த நாட்டிய நிருத்திய மாணவிகளுக்கு பயிற்சிகள் இடம்பெற்றது.

அந்நிகழ்ச்சி மணிமண்டப முன்னாள் தலைவர்வி.ரி. சகாதேவராஜாதலைமையில் நடைபெற்றது .

அங்கு அவர் மேலும் பேசுகையில்..

சுவாமி விபுலாநந்தர் பிறந்த இல்லத்தை பார்க்க கிடைத்தை ஒரு பாக்கியமாக




கருதுகின்றேன். தமிழ்நாட்டில் உள்ள மாணவர்களை விட இலங்கையில் உள்ள மாணவர்கள் கலையில் ரொம்ப ஆர்வமாக இருக்கிறார்கள். எனக்கு யாழ்ப்பாணம் மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களில் நிறைய நண்பர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் வெளிநாடுகளில் பல கலைப் பள்ளிகளை நடத்தி வருகின்றார்கள். நான் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பயின்றவன். சிதம்பரம் நடராஜர் ஆலயம் சிறப்பானது. பரதநாட்டியத்தில் அரைமண்டி முழு மண்டி முக்கியமானது இதை இன்று உங்களுக்கு சொல்கின்றேன் என்றார். மாணவருக்கு பயிற்சி வழங்கிய சுரேஷ் தம்பதிகளுக்கு மணிமண்டப முன்னாள்தலைவர் வி.ரி.சகாதேவராஜா மற்றும் நடன ஆசிரியை திருமதி ஷர்மிளா சுதாகரன் ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்கள். பல்கலைக்கழக மாணவி ஜெயகோபன் தக்சாளினி அவர்களுக்கு கலைப்பரிசைக் கையளித்தார்.

வரலாறு

அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று தனக்கான ஒரு அங்கிகாரத்தை பெற்ற விரல் விட்டு எண்ணக்கூடிய ஆண் நடன கலைஞர்களுள் ஒருவர் சுரேஷ். அவுஸ்ரேலியா நாட்டில் சமர்பணா நாட்டிய பள்ளியை நடத்தி வருபவர்.. அவரும் அவரது மனைவியாரும் சிறந்த நாட்டிய கலைஞர் திருமதி. சோபனா சுரேஸ்..

அவர் நடனக்கலை உடன் சிலம்பு கலையிலும் சிறந்தவர். அண்மையில் நடனத்திற்கு முக்கியமானது தாளம். அதனை விளக்கி 108 பரதநாட்டிய ஜதிகள் எனும் நூலை தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிட்டவர் .. ஆன்லைன் இலும் பல்வேறு நிகழ்ச்சி திட்டங்களை தன் வசம் கொண்டவர். என்பது குறிப்பிடத்தக்கது.

# கல்முனை பற்றிமாவில் 82 பேர் சித்தி!




**(வி.ரி.சகாதேவராஜா)**

கிழக்கில் பூகழ்பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியில் நேற்று வெளியான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளின்படி 82 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளார்கள்.

கல்லூரி அதிபர் அருட்சகோ. சந்தியாகு செபமாலை கூறுகையில்..

எமது பாடசாலையில் 225 மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.


ஆகக்கூடிய புள்ளியாக 178 புள்ளிகள் கிடைக்கப்பெற்றது.என்றார்.

# களுவாஞ்சிகுடி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஆயுள்வேத மருத்துவ முகாம்









**(ரக்ஸனா)**

களுவாஞ்சிகுடி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஆயுள்வேத மருத்துவ முகாம்.

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப் பற்றுப் பிரதேசத்தில் அமைந்துள்ள எல்லைப் புறக்கிராமமான கண்ணபுரத்தில் களுவாஞ்சிகுடி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் வியாழக்கிழமை(2%) ஆயுள்வேத மருத்துவ முகாம் ஒன்று இடம்பபெற்றது.

இதன்போது போதீவுப்பற்று பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர், மற்றும் களுவாஞ்சிகுடி லயன்ஸ் கழகத்தின் உறுப்பினர்கள், ஆயுள்வேத வைத்தியர்கள், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். இதில் அப்பகுதியைச் சேர்ந்த பல பொதுமக்கள் கலந்து கொண்டு நன்மை பெற்றிருந்தனர்.

இம்மருத்துவ முகாமுக்குரிய நிதி அனுசரணையை களுவாஞ்சிகுடி லயன் கழகத்தின் பொருளாளரும், கழகத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தின் 306சி பிரிவின் ஆளுனர் சபை உறுப்பினருமாக லயன்.ஆனந்தராஜா அவர்கள் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கிழக்கு மாகாணத்தில் 75வது சுதந்திரதின விழா 2 ஆம் திகதி திருமலை அனுராதபுர சந்தி ஜூம்ஆப் பள்ளிவாயலில் நடாத்த சகல ஏற்பாடு!

**அபு அலா**



பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் பணிப்புரைக்கமைவாக, கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்காவின் அறிவுருத்தல்களுக்கிணங்க %5வது தேசிய சுதந்திரதின விழா எதிர்வரும் 02 ஆம் திகதி அஸர் தொழுகையின் பின்னர் (மாலை 3.30 மணி) திருகோணமலை - அனுராதபுர சந்தியில் அமைந்துள்ள ஜூம்ஆப் பள்ளிவாயலில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிருவாகம்) ஆ.மன்சூர் தெரிவித்தார்.

%5வது தேசிய சுதந்திரதின விழா நடாத்துவது தொடர்பான கலந்துரையாடல் (26) கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிருவாகம்) கேட்போர் கூடத்தில் கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிருவாகம்) ஆ.மன்சூர் தலைமையில் இடம்பெற்ற போதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், அன்றைய தினம் 3.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள 75வது சுதந்திரதின விழாவுக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்கா பிரதம அதிதியாக கலந்துகொண்டு சுதந்திரதின விஷேட உரையினை நிகழ்த்தவுள்ளார். இவ்விழாவில், திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் வி.எச்.என்.ஜெயவிக்ரம, கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண திணைக்களத் தலைவர்கள், அனைத்து பள்ளிவாயல் சம்மேளன தலைவர், செயலாளர், உலமாக்கள், மத்ரசா மாணவர்கள், விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இவ்விழாவில் பங்கேட்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஏழு வருடங்களின் பின் கும்பாபிஷேகம் இடம்பெற்றமையால் சிவராத்திரிக்கு திருக்கேதீஸ்வரம் ஆலயம் வரும் பக்தர்கள் அதிகரிக்கும்





**( வாஸ் கூஞ்ஞ)**



மன்னார் பாடல்தளமான திருக்கேதீஸ்வரத்தில் எதிர்வரும் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு இவ் வருடம் பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்ள இருப்பதாக இது தொடர்பாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 18ந் திகதி நடைபெற இருக்கும் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு மன்னார் பாடல் தளமான திருக்கேதீஸ்வர ஆலயத்தில் இடம்பெற இருக்கும் இவ்விழா தொடர்பாக மன்னார் மாவட்ட செயலகத்தில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் புதன்கிழமை (25) கூட்டம் நடைபெற்றது.

இவ் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் பாதுகாப்பு படையினர் மற்றும் திருக்கேதீஸ்வர ஆலய செயலாளர் திரு எஸ்.எஸ். இராமகிருஷணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ் கூட்டத்தின்போது கருத்து தெரிவிக்கப்படுகையில் கடந்த 2015 ஆம் ஆண்டிலிருந்து ஏழு வருடங்களாக இவ் ஆலயத்தில் புனரத்தான வேலைகள் இடம்பெற்றமையால் இவ் கோவிலில் பாலாலயம் அமைத்து சுவாமிகள் வழிபட்டு வந்தனர்.

ஆனால் தற்பொழுது இவ் ஆலயத்தில் 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் கும்பாபிஷேகம் இடம்பெற்றுள்ளமையால் ஆலயத்துக்குள் பக்தர்கள் சென்று வழிபட்டு வருகின்றனர்.

இதனால் இவ் வருடம் வடக்கு பகுதியில் மட்டுமல்ல இலங்கையின் நாலா பக்கங்களிலிருந்தும் பெருந் தொகையான பக்தர்கள் கலந்து கொள்ள இருப்பதனால் சுமார் ஐந்து லட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் வருகைதர இருப்பதாக எதிர்பார்க்கப்படுவதாக இவ்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதனால் இதற்கேற்றவாறு போக்குவரத்துக்கள் , சுகாதாரம் , அன்னதானம் , தாகசாந்தி நிலையம் , குடிநீர் போன்ற முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டதுடன் இதற்கான சகல நடவடிக்கைகளையும் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் கவனம் செலுத்த வேண்டும் என அரச அதிபர் வேண்டுகோள் விடுத்தார்.

17 ,18 , 19 ஆகிய திகதிகளில் ஆலய சூழலில் உள்ள நான்கு மடங்களிலும் அன்னதானம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் ஏழு இடங்களில் தாகச்சாந்திக்கான நிலையங்களும் அமைக்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தற்பொழுது கொவிட் அபாயம் இங்கு இல்லாமையால் பக்தர்கள் சுதந்திரமாக வந்து செல்ல முடியும் என சுகாதாரப் பிரிவினால் இங்கு தெரிவிக்கப்பட்டது.

# கொட்டும் மழைக்கு மத்தியிலும் மட்டக்களப்பில் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கறுப்பு ஜனவரி போராட்டம் முன்னெடுப்பு



**(சுமன்)**

இலங்கையில்காணாமல்ஆக்கப்பட்டுபடுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவாக அனுஸ்டிக்கப்படும் கறுப்பு ஜனவரி தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் காந்தி பூங்காவில் அமைந்துள்ள உயிரிழந்த ஊடகவியலாளர்களின் நினைவுத்தூபிக்கு முன்பாக அமைதியான முறையில் கவனஈர்ப்பு போராட்டம் ஒன்று மட்டக்களப்பு தமிழ் ஊடகவியாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று காலை முன்னெடுக்கப்பட்டது..

மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வா.கிருஸ்ணகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெகதாஸன், பி2பி அமைப்பின் இணைப்பாளர் எஸ். சிவயோகநாதன், அமைப்பின் பிரதிநிதி செல்வகுமார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது கறுப்பு ஜனவரி தினத்தை அனுஸ்டிக்கும் முகமாக ஊடகவியலாளர்கள் கறுப்புப் பட்டி வாயில் அணிந்து சிவப்பு மெழுகுதிரி ஏற்றி அஞ்சலி செலுத்தியதுடன், கவனயீர்ப்புப் போராட்டமொன்றும் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய தினம் மட்டக்களப்பு மாவட்டம் பூராகவும் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்துகொண்டிருக்கும் தருவாயிலும், மழையையும் பொருட்படுத்தாது ஊடகவியலாளர்களால் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அரச அதிபர் ஏர் பிடிக்க, மேலதிக அரச அதிபர் அவுரியில் மேல்நின்று நெல் தூற்ற களைகட்டிய அம்பாறை மாவட்ட தைப்பொங்கல் விழா















(வி.ரி. சகாதேவராஜா)

அரசஅதிபர் டக்ளஸ் ஏர் பிடிக்க, மேலதிக அரச அதிபர் ஜெகதீசன் அவுரியில் மேல்நின்று நெல்தூற்ற, அம்பாறை மாவட்ட தைப்பொங்கல் விழா நேற்று முன்தினம் களைகட்டியது.

அம்பாறை மாவட்ட செயலகத்தின் தைப்பொங்கல் விழா, வெகு சிறப்பாக நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் என்.டக்ளஸ் தலைமையில் கச்சேரி வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

நீண்டகாலத்துக்கு பிறகு மாவட்ட இந்து கலாச்சார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி ஏற்பாட்டில், மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசனின் வழிகாட்டலில் பாரம்பரியங்களுடன் சிறப்பாக நடைபெற்றது.

மூவின அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் ,ஊழியர்கள் கலந்து கொண்ட இவ் விழாவில்

முறைப்படி ஏர்பிடித்து உழுதல் தொடக்கம் அறுவடை வரைக்கும் செய்முறை விளக்கங்களுடன் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

அதன்போது, அரச அதிபர் என்.டக்ளஸ் ஏர் பிடிக்க, மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் வேலைக்காரன் கம்புடன் வர, ஏனைய உத்தியோகத்தர்கள் சுளகு கைப்பெட்டி போன்ற உபகரணங்களைச் சுமந்து வந்த காட்சி பலரையும் வெகுவாகி ஈர்த்தது.

ஏலவே கொண்டு வரப்பட்ட விளைந்த வேளாண்மையை அரச அதிபர் உள்ளிட்ட அனைவரும் தாக்கத்தி கொண்டு அறுவடை செய்து, அதனை படங்கில் இட்டு அடித்து பதப்படுத்தி அவுரியில் மேல் நின்று கைப்பெட்டியிலும் சுளகிலும் வைத்து தூற்றி சு த்தமான நெல்லாக்கினர்.

பின்பு, அதை உரலில் இட்டு உலக்கையால் குற்றி அரிசாக்கி, பின்பு பொங்கல் பானையை வைத்து எருமைப்பால் இட்டு பொங்கினார்கள்.

பின்பு கரும்பு உள்ளிட்ட மங்களப் பொருட்களின் வைத்த பீடத்தில் வைத்து பொங்கல் செய்து வழிபட்டார்கள்..

மொத்தத்தில் பொங்கல் விழா அனைத்து இனமதத்தினரையும் வெகுவாக கவர்ந்தது.







